26.06.2025

O.S.No.34/2014

**வா.சா.1** .திரு.சூடாமணி, த.பெ.அம்மாசி என்ற நல்லு

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. பொன்னுத்தாய் என்பவரிடமிருந்து தாவா சொத்தை நாங்கள் வாங்கினோம். 1ம் பிரதிவாதி வேல்முருகன் நாடார் என்பவரிடமிருந்து சொத்தை வாங்கினார்கள் என்றால் ஆமாம். நாங்கள் 1974ம் ஆண்டு சொத்தை வாங்கினோம். அதன்பின்னிட்டு 1975ம் ஆண்டு 1ம் பிரதிவாதி வாங்கியுள்ளார். 1ம் பிரதிவாதியிடமிருந்து, 2ம் பிரதிவாதி 1995ம் ஆண்டு சொத்தை வாங்கினாரா என்றால் ஆமாம். 2ம் பிரதிவாதியிடமிருந்து 3ம் பிரதிவாதி 2008ம் ஆண்டு சொத்தை கிரையம் வாங்கினாரா என்றால் ஆமாம். தாவா சொத்தில் நவா இந்தியா மெட்ரிக்லெசன் பள்ளி உள்ளது என்றால் இல்லை. நான் 20.04.2013ம் ஆண்டு நாங்கள் வாங்கியுள்ள சொத்தை 1 முதல் 3 பிரதிவாதிகள் கிரையம் வாங்கியுள்ளீர்கள் என்றும், ஊரில் பஞ்சாயத்து பேசியதாக சொல்லும்பட்சத்தில் யார் முன்னிலையில் பஞ்சாயத்து பேசினோம் என்றால் ஞாபகமில்லை. ஊர் பஞ்சாயத்தில் பேசியதாகவும், 6 மாதத்தில் பத்திரத்தை ரத்து செய்து கொடுத்துவிடுவதாக கூறினார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் ஏதாவது புகார் கொடுத்தேனா என்றால் உரிமையியல் பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ள சொல்லிவிட்டார்கள். புகார் மனு இரசீது எதுவும் கொடுத்தார்கள் என்றால் இல்லை. புகார் மனு கொடுத்தேன் என்று சொல்வது, பஞ்சாயத்து பேசினேன் என்று சொல்வது ஆகியவை காலவரையறைச் சட்டத்தின் முன் தப்பிப்பதற்கு பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

2. தாவா சொத்தை 3ம் பிரதிவாதி கிரையம் வாங்கிபின்பு அவரது அனுபவத்தில் தான் உள்ளது என்றால் இல்லை. தாவா சொத்தில் 3ம் பிரதிவாதி கக்கூஸ் கட்டி மாணவர்கள் இன்றைய தினம் வரை பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் இல்லை. வா.சா.ஆ.12 முதல் வா.சா.ஆ.20 வரையான அடங்கல் ஆனது அழகர்சாமி பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.21 அடங்கலில் 2ம் பிரதிவாதி முருகன் பெயர் உள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.21 அடங்கலில் 2ம் பிரதிவாதி முருகன் பெயர் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.22 அடங்கலில் 3ம் பிரதிவாதி ராஜு பெயர் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 ஆவணங்கள் நாங்கள் பொன்னுத்தாய் என்பவரிடம் கிரையம் வாங்கி ஆவணம் மற்றும் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ளோம்.

3. கிரையம் வாங்கியதற்குபின்பு நாங்கள் சொத்துப் பக்கமே சென்றதில்லை என்றாலும், கிஸ்தி இரசீது எதுவும் வாங்கவில்லை என்றாலும், நாங்கள் வாங்கிய பத்திரத்தில் சர்வே எண்ணை தவறுதலாக போட்டுவிட்டு தற்போது பள்ளி நடத்துபவரிடம் பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.